# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**AYIDHA EZHUTHU**

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் - 2018

9



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

**UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது**

**UCG RECOGNIZED JOURNAL**

**UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118**

மலர் : 6 அக்டோபர்-2018 இதழ் : 10

பதிப்பாசிரியர்

நல். நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
82489 54308, 63817 01339

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.P.Sathyamoorthy**
*Madurai Kamarajar University, Madurai.*
mkutamil2010@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.*
mkutamil2010@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

14. தன்வரலாற்று நாவல்களில் திருமணம்

*செ.மகாலிங்கம் - 43

15. சிவசங்கரி நாவல்களில் பெண்களின் சமூக நிலை

*அ.மலர்கொடி - 46

16. பண்பாடு பேசும் பத்துப்பாட்டு

*முனைவர் மாணிக்க.வீரமுருகன் - 49

17. குறுந்தொகையில் ஔவையார் குறிப்பிடும்
பெண்களின் வாழ்வியல் நெறி

*த.புவனேஷ்வரி - 54

18. சங்கப்புறப்பாடல்களில் கலைத்தொழில், அடிமைத்தொழில்

*த.ராமலெட்சுமி - 57

19. 'முதற்கனல்' நாவலில் தொன்ம வழி ஜெயமோகன்
கட்டமைக்கும் வருணாசிரமம்

*ரா.நாகஜோதி - 60

20. இலக்கிய நாடககாட்சித் தொடர்பியலில் நடிகனும்பார்வையாளனும்

*ப.கருப்புசாமி - 63

21. சங்க இலக்கியங்கள் காட்டும் பாண்டிய நாடு

*முனைவர் ப.பிரதீபா - 66

22. நாலடியாரில் மகளிர் பதிவுகள்

*ப.சரஸ்வதி - 70

23. புதினஇலக்கியம் புலப்படுத்தும் பெண்ணின்உள்மன ஆளுமை

*முனைவர் அ.பூரணலதா - 73

24. என். ஸ்ரீராமின் 'அத்திமரச்சாலை' நாவலில் மக்களின் வாழ்வியல்

*எஸ்.பிரேமா - 76

25. குறுந்தொகை - இயற்படமொழிதல் வழி அகவாழ்வியல் கோட்பாடு

*முனைவர் சீ.புஷ்பலதா - 78

26. மதுரைக்காஞ்சியில் பழந்தமிழர் வாழ்வியல்

*இரா.கலைவாணி - 81

# சங்கப்புறப்பாடல்களில் கலைத்தொழில், அடிமைத்தொழில்

*த.ராமலெட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம், திருநெல்வேலி 627005

**முன்னுரை**

தமிழகம் மூவேந்தர்களாலும், குறுநில மன்னர்களாலும் கடையெழு வள்ளல்களாலும் ஆட்சி செய்யப்பட்ட சங்க காலத்தைப் பொற்காலம் என வரலாறுகள் கூறுகின்றன. பொற்காலம் என்பது அரசன் முதல் அடித்தட்டு மக்கள் வரை அனைவரும் வாழ்வின் அடிப்படைத் தேவைகளை எவ்விதச் சிக்கலுமின்றி பெற்று வாழ்வதே ஆகும். ஆனால் சங்கப் புறப்பாடல்களை நுணுகி ஆராயும் போது தனது அன்றாடத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாத வறுமைநிலை வாழ்வினை வாழ்ந்த அடித்தட்டு மக்களைப் பற்றி அறிய முடிகின்றது. அத்தகைய மக்களைப்பற்றி ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

**விளிம்பு நிலை மாந்தர்கள்**

மனிதத் தேவைகளுள் மிகவும் இன்றியமையாதது உண்ண உணவம், உடுக்க உடையும் வாழ்வதற்கு ஏற்ற உறைவிடமுமாகும். இவற்றுள் ஏதேனும் ஒன்று குறைவுபட்டாலும் அத்தகைய மனிதன் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவனாகக் கருதப்படுகிறான். சங்க காலத்தில் உழவும் வாணிகமும் சிறப்புற்றிருந்தாலும் அனைத்து மக்களின் தேவைகளும் முழுமையாகப் பூர்த்தி செய்யபடவில்லை. உண்ண உணவுமின்றி உடுக்க உடையுமின்றி அல்லல் பட்டோர் பலர் இருந்தனர்.

அவர்களுள் கலைத் தொழிலை வாழ்க்கையாகக் கொண்ட பாணர், பொருநர், கூத்தர், விறலி போன்றோர் ஆவர். மேலும் சிலர் அரண்மனைகளிலும் செல்வந்தர் இல்லங்களிலும் அடிமைகளாகவும், ஏவல் தொழில் புரிவோராகவும் போர்க்களத்து அடிமைகளாகவும், ஈமத்தொழில் புரிவோராகவும் இருந்தனர். இவர்கள் தம் பிழைப்பிற்காகச் செல்வந்தர்களின் கைகளை எதிர்ப்பார்த்தே வாழ்க்கை நடத்தினர். வறுமையும், குடும்பச் சூழலும். இவர்களது வாழ்க்கையை விளிம்பு நிலைக்கே தள்ளியது. செல்வச் செழிப்பு மிக்க அரசரும், செல்வந்தர்களும் ஆடம்பர வாழ்வை மேற்கொண்ட சங்க காலச் சமுதாயத்தில் பசியும், பட்டினியுமாக இம்மாந்தர்கள் வாழ்ந்து வந்தனர். இத்தகைய மாந்தர்களையே விளிம்பு நிலை மாந்தர்கள் என இவ்வியல் சுட்டிக் காட்டுகிறது.

**கலைத் தொழில் மாந்தர்கள்**

இசைக்கலை, கூத்துக்கலை, நடிப்புக்கலை போன்ற கலைத் தொழிலில் ஈடுபடுவோர் முறையே பாணர், பாடினி, கூத்தர், பொருநர், விறலியர் என அழைக்கப்படுவர். இவர்கள் நல்ல குரல் வளமும், இசை மீட்டும் பயிற்சியும், ஆடற் திறனும், நடிப்புத் திறமையும் உடையவராக விளங்கினார்.

**பாணர் பாணர் என்ற சொல்லுக்கு**

“சங்கீதம் பாடிப் புகழ்வோர் தையற்காரர்” என்று மதுரைத் தமிழ் பேரகராதியும் (சந்தியா நடராஜன், மதுரைத் தமிழ்ப்பேரகராதி, ப.175) “Bard, Singer, Minstrel Worthlessman” என்று தமிழ் ஆங்கில அகராதி. (இரா.பாலகிருட்டிண முதலியார், தமிழ் ஆங்கில அகராதி, ப.365) பொருள் கூறுகிறது. இவர்கள் பாடல் பாடுவதிலும், இசை மீட்டுவதிலும் கைதேர்ந்தவர்களாக விளங்கினார். இவர்களில் சிலர் வேறு தொழில்களையும் செய்து வந்தனர். கலை வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதாலும் அவற்றின் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டதாலும் வாழ்வில் பொருள் சேர்த்தலைக் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. மேலும் புரவலரிடமிருந்து பெற்ற பொருட்களைத் தாமே வைத்துக் கொள்ளாமல் அவ்வப்பொழுது எல்லார்க்கும் வழங்கி மகிழ்ந்தனார். இதனை

**“பசித்த ஒக்கல் பழங்கண் வீட”** (புறநானூறு 389)
**“இரும்பேர் ஒக்கல் பெரும்புலம்பு அகற்ற”** (புறநானூறு 390)

ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

2278-7550